★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✠ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: சித்திரை 4உ திங்கள் (16—4—56) ★ ★ வெளியூர்: சித்திரை 5உ செவ்வாய் (17—4—56) [இதழ் 260

பம்பாய் சம்பவம்: பாதிக்கப்பட்டோருக்கு தாராளமான உதவி

'பம்பாய் மராட்டியத்திற்கு இல்லை' என்ற டில்லியின் அக்கிரமத் தீர்ப்பிற்கு எதிராகத் திரண்டெழுந்த மராட்டியரை அடக்கி ஒடுக்கிவிட நினைத்து பம்பாய் சர்க்கார் கட்டவிழ்த்து விட்ட மிருகத்தனமான அடக்குமுறைகளுக்கு, 'குற்றமேதும்' புரியாத—கிளர்ச்சிகளில் ஈடுபடாத சாதாரண மக்கள் பலர் பாதிக்கப்பட்டார்கள். அவர்களுக்கெல்லாம், மானியம், வாழ

(4-ம் பக்கம் பார்க்க)

சந்தான அய்யங்காரின் சாயம் வெளுக்கிறது!

'பாசன வசதிகளிலும், மின்சாரப் பெருக்கத்திலும் பம்பாய் முன்னிலையில் இருக்கிறது'

'முன்னிலை பெருதத் துறைகளில் மற்ற மாகாணங்களுடன் இணையாக இருக்கிறது'

பெருமிதத்துடன் பூரிக்கிறர் துணை மந்திரி பாபுபாய் படேல்

பம்பாய், ஏப். 14—

"நீர்ப்பாசனம், மின்சாரம், பாதை அமைத்தல் முதலிய துறைகளில், பம்பாய் மாகாணம், மற்ற மாகாணங்களைக்காட்டிலும் முன்னேறியுள்ளது."

"முன்னேறி இல்லாதத் துறைகளில், பம்பாய் மற்ற மாகாணங்களுக்குச் சமமாக இருந்துவருகிறது."

—இவ்வாறு, முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் பம்பாய் பெற்றுள்ள முற்போக்கு நிலை குறித்து, மராமத்துத் துறை துணை மந்திரியான பாபுபாய் படேல், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் கண்காட்சியில் பேசி இருக்கிறர்.

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ள மொத்தத் தொகையில் 48 சதவிகிதம், நீர்ப்பாசன வசதிகளுக்கும், மின்சாரப் பெருக்கத்திற்கும் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. ஆனல் எஞ்சிய நாட்டின் பகுதிகளில், அத்துறைகளுக்காக 18 சதவிகிதம்தான் ஒதுக்கப்பட்டு இருக்கிறது."

—இவ்வுண்மையை, பம்பாய் அரசாங்கத்தில் நிர்வாக பொறியியல் அதிகாரியாக இருக்கும் டாக்டர் எஸ் ஏ. அடிக் என்பவர், 'பாசனம், மின்சாரம், மராமத்து தினம்' கொண்டாட்டத்தில் வெளியிட்டுள்ளார்.

அதற்கு அவர், நீர்ப்பாசனத்தில் பம்பாய் பின்தங்கி இருப்பதால், இப்பெரும் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதாக சமாதானம் கூறுகிறர்.

துணை அமைச்சர் புகழ்ச்சியாகக் கூறுவதை இந்திய அரசாங்கத்தின் நிதிக் குழுத் தலைவராக நியமனம் பெற்றிருக்கும் சந்தானம் அய்யங்கார் சில நாளைக்கு முன்பு மதுரையில் பேசிய பேச்சுடன் ஒப்பிட்டு நோக்க வேண்டும். அப்பொழுதுதான் அய்யங்காரின் கூற்று எந்த அளவு பொய்மையானது என்பது விளங்கக்கூடும்.

குறிப்பு:—"பாசன ஏற்பாடுகளில் முதல் திட்டத்தில் மேற்குறிப்பிட்ட மாகாணங்கள் எந்தவித நன்மையும் பெருததையும் உணர்ந்து கொள்ள அவர்களால் முடியும்.

"வடக்கிலுள்ள பம்பாய், மற்றுமுள்ள ராஜ்யங்களுடன் பாசன வசதியில் சென்னை பெற்றுள்ள நன்மைகளை ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, சென்னை மிகுதியாகப் பெற்றுள்ளது விளங்கும். அதுவுமன்றி, இனி மேற்கொள்ளத்தக்க பாசனத் திட்டங்களே கிடையாது எனக் கூறத்தக்க நிலையில் சென்னை சலுகை பெற்றிருக்கிறது என்பது கருதத்தக்கது. சென்னை கிளத்திய எந்த ஒரு பாசன ஏற்பாட்டையும் இதுவரை இந்திய அரசாங்கம் ஒதுக்கித் தள்ளியதே கிடையாது."

இவ்வாறு 25-3-56-ல், மதுரை—இராமநாதபுரம் வியாபாரச் சங்கத்தில் பேசும்பொழுது இந்திய அரசாங்க நிதிக்குழுத் தலைவர் பொறுப்பேற்க இருக்கும் எஸ். சந்தானம் அய்யங்கார் அவர்கள் கூறியுள்ளார்.

டில்லி பத்திரிகையின் அளவு கடத்தல்?

மாநில சட்டசபை நடவடிக்கை 'இந்துஸ்தான் டைம்ஸ்' என்ற இதழ் எழுதியுள்ள தலையங்கம் ஒன்று, டில்லி சட்டசபையின் உரிமைக்கு ஊறு தேடுவதாக அமைந்துள்ளது என்பதால், அதுபற்றி, சபையின் உரிமை விசாரணைக் குழு ஆராய வேண்டும் என்று கோரப்பட்டிருக்கிறது.

டில்லி மாநில சட்டசபையில் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் ஐந்து பேர், மேற்கண்டவாறு கோரிக்கை தெரிவித்து தீர்மானம் கொண்டுவந்தனர்.

சபைத் தலைவரான டாக்டர் சுசிலாநய்யார், 'இந்துஸ்தான் டைம்ஸ்' 'தவறுன தந்திரம்' என்ற தலைப்பிட்டு எழுதியுள்ள தலையங்கத்தைப் பொறுத்து, 'அந்த இதழ், எல்லைமீறிப் போயிருப்பதாகவே தெரிகிறது; எனவே, சபையின் உரிமைகளுக்கு ஏதேனும் ஊறு ஏற்பட்டிருக்கிறதா என்பதை உரிமைக் குழு விசாரிக்க வேண்டும்' என்று, முடிவு கூறியிருப்பதாகத் தெரிகிறது.

காமராசரின் மகத்தான சாதனை?

சென்னை முதலமைச்சர் காமராசரின் மகத்தான சாதனை(!) ஒன்று குறித்து செய்தி கிடைத்திருக்கிறது.

சேலம் மாவட்டத்தில் 5 நாட்கள் சுற்றுப் பயணம் செய்தாராம்.

அந்த 5 நாட்களில் 7 பொதுக் கூட்டங்கள் உள்ளிட்ட 50 நிகழ்ச்சிகளில் சுமார் 400 மைல்கள் பிரயாணம் செய்து கலந்துகொண்டு சிறப்பித்து விட்டு(!) ஊர் திரும்பியிருக்கிறாராம்!

இந்த மகத்தான சாதனை(!)யைத்தான் இதழ்கள் சில வழக்கம்போல, பிரமாதமாகப் பிரசுரித்துள்ளன.

'காஷ்மீர் மக்கள் பண்டங்களுமல்ல—விலங்குகளுமல்ல'

'வாக்கெடுப்புப் பேச்சுக்கு இடமில்லையானல் இந்தியப் பிரதமரை சந்திப்பதும் அவசியமில்லை'

'காஷ்மீரைத் துண்டாடும் கருத்து புதிதல்ல'

'1948-ம் ஆண்டிலேயே அறிவிக்கப்பட்டதுதான்'

ஐக்கிய நாடு பஞ்சாயத்தார் ஓவன் யோசனையும் அதுவேதான்!

காஷ்மீரைப் பகிர்ந்து கொள்ளும் யோசனைக்கு பாகிஸ்தான் கருத்தறிவிப்பு

"காஷ்மீர் பிணக்கில், பாகிஸ்தான்—இந்தியா தொடர்பு கொண்டிருப்பது நீங்கலாக, மூன்றும் கட்சியாக காஷ்மீர் மக்களும் தொடர்பு கொண்டிருக்கின்றனர்.

"காஷ்மீர் இராஜ்யத்தின் எதிர்கால இணைப்பை அவர்கள் தான் முடிவு கட்டியாக வேண்டும். இக்கட்டில்லாத வாக்கெடுப்பின் மூலம்தான் இது செயல்பட முடியும்.

"இந்தியப் பிரதமர் வெளியிட்டுள்ள யோசனையை பாகிஸ்தான் ஒப்புக்கொண்டு, இந்தியாவிற்கும்—தனக்கும் இடையில் காஷ்மீரைப் பங்கு போட்டுக் கொள்வதற்கு, காஷ்மீர் மக்கள் வெறும் பண்டங்களுமல்ல; மிருகங்களுமல்ல.

"காஷ்மீரைத் துண்டாட இப்பொழுது இந்தியப் பிரதமரால் வெளியிடப்பட்ட கருத்து, ஏற்கனவே 1948-ல், அப்பொழுது பாகிஸ்தான் பிரதமராக இருந்த காலஞ்சென்ற லியாகத் அலிகானிடமும் கூறப்பட்டது. அதை ஒப்புக்கொள்ள முடியாது என உதறித் தள்ளப்பட்டது. சென்ற மே திங்களில் அதே கருத்தை பாகிஸ்தான் பிரதமரிடம், இந்தியப் பிரதமர் கூறிய காலையிலும், அதை ஒப்புக்கொள்ள மறுக்கப்பட்டு விட்டது.

"அகில உலக உடன்பாடுகளுக்கு இந்தியா எந்த அளவு மதிப்பு வைத்திருக்கிறது என்பதற்கும், அவருடைய வார்த்தைகளில் எந்த அளவு நம்பிக்கைக் கொள்ளலாம் என்பதற்கும் இந்தியப் பிரதமரின் யோசனை ஓர் விளக்கமாக இருக்கிறது".

—இத்தகவல்களை, பாகிஸ்தான் பிரதமர் முகமத் அலி, பத்திரிகை நிருபர்களிடம் கூறினர்.

காஷ்மீரில் வாக்கெடுப்புக்கு இடமில்லை என முடிவாக இந்தியப் பிரதமர் திட்டவட்டமாகக் கூறி விட்ட பிறகு, காஷ்மீர் எதிர்காலம் பற்றி இந்தியப் பிரதமரை நேரில் சந்தித்துப் பேச வேண்டிய அவசியமே கிடையாது எனவும், எனவே, காஷ்மீர் பிரச்சினையை ஐக்கியநாடு சபை பாதுகாப்புக்குழுவிற்குத்தான் கொண்டு போக வேண்டுமெனவும் பாகிஸ்தான் பிரதமர், மேலும் குறிப்பிட்டுள்ளார்.

"தங்களுடைய எதிர்காலத்தைத் தீர்மானித்துக் கொள்வதற்கு இயல்பாக உரிமை கொண்டிருக்கும் அப்பிரதேச மக்களிடையே, காஷ்மீர் பிரச்னையை விட்டு விட வேண்டும்."

என்ற இந்தியப் பிரதமரின் கருத்துக்கு, தனது கருத்தைத் தெரிவித்திருக்கிறர் மேற்கு பாகிஸ்தான் முதல் மந்திரி டாக்டர் கான் சாகிப்.

குறிப்பு:—ஐக்கிய நாடு சபையால் காஷ்மீர் பஞ்சாயத்தாராக நியமிக்கப்பட்ட சர் ஓவன் டிக்சன் என்பவர் கூறியுள்ள, காஷ்மீரைத் துண்டாடும் கருத்துப் போன்றதாகவே, இந்தியப் பிரதமரின் கருத்து இருக்கிறது என்று புதுடில்லி நிபுணர்கள் கூறுகின்றனர்.

"காஷ்மீரில் வாக்கெடுப்பை செயலாற்றுவதின் விளைவாக, அந்த இராஜ்யம் முழுதும் இந்தியாவுக்கு மாறிவிடும் பட்சத்தில், பெரும் தொகையான முஸ்லீம்கள் இடம் பெயர வேண்டிவரும்; அதனுல் மற்றொரு அகதிகள் பிரச்சினை பாகிஸ்தானுக்கு ஏற்பட்டு விடும்.

"வாக்கெடுப்பின் முடிவு பாகிஸ்தானுக்குச் சாதகமாக முடிந்துவிடுமானுல், முன்போல பெருந்தவகையினதாக இல்லாது போனுலும், இடம் பெயரும் இந்துக்கள், சீக்கியர்களின் காரணமாக இந்தியாவிற்கு அகதிகள் பிரச்சினை ஏற்பட்டுவிடக்கூடும்.

"காஷ்மீரைத் துண்டாடுவதின் மூலம், இந்தத் தொல்லைகள் அனைத்தையும் தவிர்த்துவிட முடியும்."

கழகத்தின் கல்வி வளர்ச்சிப் பணி

அண்ணு கலந்து கொண்ட சிறப்புக் கூட்டம்

சென்னை திருவொற்றியூர் திமுகழகத் தோழர்கள், தாங்கள் எனுமிடத்தருகே நடத்திவரும் இரவுப் பள்ளி நிதிக்காக, சென்னை கோகலே மண்டபத்தில், 15-4-56 மாலை சிறப்புக்கூட்டம் ஒன்று நடைபெற்றது.

ஏராளமானேர், பள்ளி வளர்ச்சிக்காக ரூ. 1, அணு 8 நன்கொடையாகத் தந்து கலந்துகொண்டனர்.

கூட்டத்திற்கு தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமை வகித்தார்.

தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் சிறிது நேரம் பேசியதும், தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ. அவர்கள் சர்க்காரின் கல்விக் கொள்கை குறித்துப் பேசினர்.

(4-ம் பக்கம் பார்க்க

தொழிலாளர் அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் திட்டம்

மேலும் விரிவாக்கப்படுகிறது

புதுடில்லி, ஏப். 14—

தொழிலாளருக்கான அரசாங்க 'இன்ஷ்யூரன்ஸ்' திட்டம் இந்தியாவில் இன்னும் 22 இடங்களுக்கு விரிவாக்கப்படுமாம். மொத்தம் 85,000 தொழிலாளர்கள் இதனுல் பயன் பெறுவார்களாம். திருவாங்கூர்—கொச்சியில் ஐந்து இடங்களில் அது விரிவாக்கப்படுமாம்.

இப்போது 81 இடங்களில் மொத்தம் 10,50,000 பேர் அதனுல் நன்மையடைந்து வருகின்றனர் என்று கூறப்பட்டுள்ளது.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்
சென்னை 16—4—'56 திங்கள்

எள்ளி நகையாடத்தக்கதாகும்!

"மற்ற மத ஸ்தாபனங்களின் சொத்தை பொதுவாக எல்லா மக்களுக்கும் பயன்படும் காரியங்களில் ஈடுபடுத்துவதுபற்றி இதுவரை யாரும் யோசனை சொன்னதில்லை. மற்ற மதங்கள் விஷயத்தில் மிகத் தெளிவாகத் தோற்றும் நியாயம் இந்து மதம் என்ருல் மட்டும் ஏன் புலப்படுவதில்லை ?"

இவ்வாறு நியாயவாதம் பேசுகிறது 'சுதேசமித்திரன்'!

மேற்படி ஏடு, கிளப்பிய மற்ருெரு ஐயத்திற்கு ஏற்கனவே நாம் பதில் தந்திருக்கிருேம். இப்பொழுது மேலே எடுத்துக் காட்டியுள்ள அதன் 'நியாய வாத'த்திற்கு பதில் தருவோம்.

மற்ற மத நிறுவனங்களின் சொத்துக்கள், அம்மதத்தைப் பின்பற்றுகின்ற அனைவருக்கும் பொதுவாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அதில் உயர்வு-தாழ்வு, கீழ்-மேல் முகத்தில் பிறந்தவன். பாதத்தில் உதித்தவன் என்ற பாகுபாட்டிற்குத் துளியும் இடமில்லாமல், அம்மதத்தைப் பின்பற்றுகிற மக்கள் அனைவருக்கும், அம்மத சொத்துக்கள் சரிசமமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

எடுத்துக்காட்டாக, கிறித்துவ மத சொத்துக்கள் பயன்படுத்தப்படும் தன்மையைப் பார்ப்போம். கல்வி, மருத்துவம் ஆகிய மக்களின் இன்றியமையாத் தேவைகளாகஉள்ள இரண்டிற்குந்தான், முதன்மையான இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது கிறித்துவ மார்க்கத்தில். கல்வி—மருத்துவம் ஆகிய இரண்டிலும், அம்மதத்தைப் பின்பற்றுகிறவர்களுக்கு செய்யப்படும் உதவியுடன் நின்றுவிடாமல், மற்ற மதங்களைச் சேர்ந்தவர்களும் அவைகளைப் பெற்றுப் பயனடையும் முறையில், கிறித்துவ மத தர்ம சொத்துக்களில் ஏற்பாடு இருக்கிறது. கிறித்துவ மார்க்கத்திற்குச் சொத்து அளிப்பவர்கள், மார்க்கப் பற்றையும் மனத்துள் கொள்வதுடன், அம்மார்க்கப் பற்று, பொது மனிதகுல தர்மத்தையும் ஒப்புக் கொள்ளும் தன்மை கொண்டதாக இருக்கவும் பார்த்துக் கொள்ளுகின்றனர். எனவே, கிறித்துவ மத சொத்துக்களை, மக்கள் அனைவரின் பொது நன்மைக்காகச் செலவிட வேண்டுமென வற்புறுத்திச் சிறப்பான சட்டமியற்ற வேண்டிய கட்டாயம் எந்த ஆட்சிக்கும்இருக்கவில்லை.

கிறித்துவ மத ஸ்தாபன தர்ம சொத்தின் விளைவினலல்லவா, பார்ப்பனச்சேரி புறத்திண்ணை அளவுடன் சிறைபட்டுக் கிடந்த கல்வி, ஊருக்கு ஒதுக்கிடமாகக் கிடக்கும் சேரிக்குள்ளும் கால் வைப்பது சாத்தியமாயிற்று. அம்மத சொத்தின் பெருந்துணையினல்தானே, குறிப்பிட்ட ஒரு சாதியினருக்கு மட்டுமே கல்வி சொந்தம் என்ற கொடும் நியதி நொறுக்கப்பட்டு, மக்களாய்ப் பிறந்த அனைவருக்கும் கல்வி பொதுசொத்து என்ற பொது அறம் அரும்பிப் பூத்து மணம் பரப்பிற்று?

கல்வித் துறையிலும், மருத்துவத் துறையிலும் மதப்பாகுபாடு கருதாது கிறித்துவ மத ஸ்தாபன சொத்துக்கள் பயன்பட்டு வரும் உண்மையை, 'சுதேசமித்திரன்' வகையருக்கள் அறியாததல்ல. அறிந்துதான் கேட்கிறது, அந்த ஏடு, இத்த விசித்திரமான வினவை?

கிறித்துவ மத ஸ்தாபன சொத்துக்கள் அம்மதத்தைச் சேர்ந்தவர்கள் அனைவருக்கும் பயன்பட்டு வருவதுபோல், இந்துமத ஸ்தாபன தர்மசொத்துக்கள், பெரும்பாலும், அம்மதத்தைச் சார்ந்துள்ள மக்கள் அனைவருக்கும் பயன்படுவது அறவே கிடையாது. 'சுதேசமித்திரன்' வகையருக்கள் தின்று கொழுக்கவும், களித்து வாழவும் பயன்பட்டு வருகின்ற நிலை எத்தகைய அக்கிரமமானதாக இருந்தபோதிலும், நாம் அதை ஒருபொருட்டாக மதித்துக் கவலை கொள்ளவில்லை. அத்தகைய தர்ம ஏற்பாடுகளின் உள்ளடக்கமாக இருந்துவரும், காலத்துக்கொவ்வாத சாதிய வெறியும், பிறப்பினல் வேற்றுமையைக் கட்டிக் காத்து வரும் கொடுமையுந்தான், நம்மைப் பெரிதும் புண்படுத்துகிறது.

செத்தச் சவமொழிவளர்ப்பு, பிறப்பினல் உயர்வு தாழ்வு பேசும் பித்தலாட்டத்திற்குப் பாதுகாப்பு, உழைப்பைப் பழித்து உழையாது உண்டு கொழுப்பதைப் போற்றுவது போன்ற அவலட்சணங்களை உள்ளடக்கிக் கொண்டு இருப்பதுதான், பெரும்பான்மையான இந்துமத அறநிலையச் சொத்துக்களின் தன்மையாகும். இந்தச் சொத்துக்களை எழுதி வைத்தவர்கள், இப்பொழுதும் அச்சொத்துக்களை உழைக்காது உண்டுகளிக்க உரிமை பேசும் 'சுதேசமித்திரன்' வகையருக்களின் உல்லாச வாழ்வைக் கண்டு எழுதி வைத்தவர்களன்று. அவர்கள் கண்ட பார்ப்பனர்களே வேறு. அந்த வேதமோதிகள் இன்று இல்லை. இன்று இருப்பவர்கள், வடமொழி வேதம் காட்டிய வழியிலிருந்து விலகி வெகு தொலைவுக்குச் சென்றுவிட்டவர்களாவர்! அத்திருக்கூட்டத்தைச் சேர்ந்தவர்கள்தான் இன்றுள்ள 'சுதேசமித்திரன்' வகையருக்கள்!

இந்துமத தர்ம சொத்துக்களை அனுபவிக்கும் கடமையுடைய வேதப் பார்ப்பனர்கள், வேத வழியை விட்டு விலகிச் சென்றுவிட்டதின் மூலம், தர்மத்திற்குச் சொத்தெழுதினவர்களின் உள்ளக் கிடக்கைக்கு, எவராலும் செய்ய முடியாத வகையிலும் அளவிலும் மகத்தான துரோகம் செய்துவிட்டிருக்கிருர்கள். வேதக் கட்டளையை மீறிவிட்டக் காரணத்தினல், சொத்தளித்தவர்களின் நோக்கப்படி, அச்சொத்துக்களில் தங்களுக்கு பாத்தியதை இருப்பதாகக் கோரும் உரிமையையும், அவர்கள் இழந்துவிட்டார்கள். எனவே, சொத்தைக் கொடுத்தவர்களின் நம்பிக்கைப்படி, ஏற்பதற்குத் தகுதி வாய்ந்தவர்கள் இப்பொழுது இல்லாததால், அந்தச் சொத்துக்களை மக்கள் அனைவருக்கும் பொது நலத்துக்காகப் பயன்படுத்துவதும், அத்துறையில் அரசாங்கம் சட்டமியற்ற முன்வருவதும், கோயில்களுக்குப் பொருளை விட்டவர்களுக்குத் துரோகம் செய்வதாக, ஒருக்காலும் கொள்ள முடியாது. பிச்சைப் பெறுவதற்குரியத் தகுதியையும் தன்மையையும் இழந்த பிறகும் கூட, 'சுதேசமித்திரன்' வகையருக்கள், தர்ம சொத்துக்களுக்குப் பல்லிளித்துக் கிடப்பதை மன்னிக்க முடியாத மகத்தான துரோகம் எனக் கூறுவதே பொருந்தக் கூடும்!

வேத தர்மத்தை இழந்தவர்களுக்கு தானம் செய்யவேண்டும் என்பது, கோயில்களுக்குச் சொத்தளித்தவர்களின் நம்பிக்கை அல்ல. எனவே, அந்தச் சொத்துக்கள் இப்பொழுதும் தங்களுக்கு மட்டுமே பயன்பட வேண்டும் என, வேதாசாரத்தைத் துறந்து, மேல்நாட்டு'மிலேச்'சாரத்தைப் பற்றிக் கொண்டிருக்கின்ற 'சுதேசமித்திரன்' வகையருக்கள், பாத்தியதைக் கொண்டாடக் கிளம்புவது பொருந்தாது என்பது மட்டுமல்ல, எள்ளி நகையாடத்தக்கதுமாகும்!

மற்றுமோர் 'கும்பமேளா'!

அரித்துவாரம், ஏப். 14—

மற்றுமோர் 'கும்பமேளா' நடைபெற்றிருக்கிறது! காசியருகே! வடநாட்டில், அரித்துவாரம் எனும் இடத்தில்!

12 ஆண்டுகளுக்கு ஒருமுறை வருவதுதானும், இந்தக் 'கும்பமேளா'வும்! 'ஆர்த கும்பமேளா' என்று பெயராம்.

எட்டு இலட்சம் பேர் 'புண்ணிய தீர்த்த'மாடினுர்களாம்!

வேத, மந்திரங்கள் ஓதப்பட்டனவாம்—ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் பங்கு பெற்றனராம்.

34,705 மைல் நீளமுள்ள இந்திய இரயில்வேக்கள்!

இதர நாடுகளுடன் ஒப்பிடும் ஒரு கண்ணேட்டம்

இந்திய இரயில்வேக்கள்தான் ஆசியாவிலேயே மிகப் பெரிய இரயில் போக்கு - வரத்து நிறுவனமாகும்; உலகத்தில் அவை 4-வது இடம் வகிக்கின்றன. அவைகளின் மொத்தப் பாதை நீளம் 34,705 மைல்கள். அவைகளில் 550 மைல் நீளமுள்ள மார்க்கந்தான் தனியார் நிறுவனங்களுக்குச் சொந்தமான 'நேரோ கேஜ்' பாதைகள்.

இந்திய இரயில்வேக்கள் சர்க்கார் உடைமை நிறுவனமாக இயங்குகிற உலக இரயில்வேக்களில் இரண்டாவது இடம் வகிக்கிறது. அதில் முதல் இடம் இரஷ்ய இரயில்வேக்கு உரியது. ஆசியாவில் சீன, ஜப்பானிய இரயில்வேக்கள் 2-வது, 3-வது இடங்களை வகிக்கின்றன.

இந்திய இரயில்வேக்களையும், இதர வெளிநாட்டு இரயில்வேக்களையும் ஒப்பிடுவதற்கு பின்வரும் புள்ளி விபரங்களைக் கவனிக்கலாம்:—ஜப்பான்—12,456 மைல்; சீன—19,000 மைல்; பர்மா—1,787 மைல்; பாகிஸ்தான்—7,082 மைல்; பிரிட்டன்—19,151 மைல்; கனடா—41,158 மைல்; அமெரிக்கா—2,24,816 மைல்; தென்னுப்பிரிக்கா - 13,413 மைல்; பிரான்ஸ்—25,600 மைல்; ஆஸ்திரேலியா—26,633 மைல்.

ஆனல் இந்தியா உச்ச இடம் வகிக்கிறதென்ருலும், அதன் மக்கள் தொகை, பரப்பளவு முதலியவைகளைக் கணிக்கும்போது இரயில்வே அபிவிருத்தி மிகக் குறைவுதான். இந்தியாவில் 1,000 சதுரமைல் பரப்பளவுக்கு 27 மைல் நீள இரயில்வேதான் இருக்கிறது. அமெரிக்காவில் அந்த விகிதம் 74 ஆகவும், பிரிட்டனில் 204 ஆகவும், கனடாவில் 12 ஆகவும், பிரான்சில் 120 ஆகவும், ஜப்பானில் 87 ஆகவும் இருக்கிறது.

இந்தியாவில் ஒரு இலட்சம் பேருக்கு 9 மைல் நீளமுள்ள இரயில் பாதைதான் இருக்கிறது. இந்த விகிதம் அமெரிக்காவில் 138; பிரிட்டனில் 37; கனடாவில் 272; பிரான்சில் 60; ஜப்பானில் 14 ஆக இருக்கிறது.

ஜப்பானில்தான் இந்தியாவை விட அதிகப் பிரயாணிகள் போக்குவரத்து இருக்கிறது தெரியவருகிறது. அமெரிக்காவிலும், கனடாவிலும் பெரும்பாலான பிரயாணிகள் மோட்டார்களில் செல்வதால், அங்கே இரயில் பிரயாணிகள் மைல் கணக்கு குறைவாக இருக்கிறது.

சாமான்கள் விஷயத்தில் இந்திய இரயில்வேக்கள் ஏற்றிச் செல்லும் எடை, இதர இரயில்வேக்களின் எடைகளைவிடக் குறைவுதான். அதற்குக் காரணம், இந்தியா, தொழில் அபிவிருத்தியில் பின் தங்கியிருப்பதுதான்.

இந்தியாவில் மக்கள் தொகைக் கணக்குப்படி ஒரு நபர், வருடத்தில் 103 மைல் தூரம் பிரயாணம் செய்வதாக ஆகிறது; அந்த விகிதம் பிரிட்டனில்—104; ஜப்பானில் 599; பிரான்சில்—385; அமெரிக்காவில் — 180; கனடாவில் 181.

சரக்குகள் விஷயத்தில் நபர் விகிதப்படி இந்திய இரயில்வேக்கள் தலைக்கு 72 டன் மைல் சரக்கேற்றிச் செல்லுகின்றன; அந்த விகிதம் கனடாவில் 3,722; அமெரிக்காவில் 3,382; பிரிட்டனில் 435; ஜப்பானில் 285; பிரான்சில் 593; தென்னுப்பிரிக்காவில் 1,158.

இதனல், இந்திய இரயில்வே, அபிவிருத்தியில் இன்னும் எவ்வளவு தூரம் முன்னேற வேண்டியிருக்கிறது என்பது தெரியவருகிறது.

இந்தியாவில் தேசிய வருமானத்திற்கும், ஒரு நபர் இரயில் பிரயாணத்திற்குச் செலவிடும் தொகைக்கும் உள்ள விகிதாசாரம் அநேகமாய் இதர நாடுகளில் உள்ள விகிதாசாரத்திற்குச் சமமாகவே இருக்கிறது என்று கூறலாம். ஜப்பானில்தான் இதைவிட உயர்ந்த விகிதம் இருக்கிறது. தேசிய வருமானம் 607.

இந்தியாவில் இரயில்வேக்களின் மூலதன இயந்திரங்கள், சாதனங்கள், கருவிகள் முதலியவைகளுக்குச் செலவிடப்பட்டுள்ள தொகையையும், இதர நாடுகளில் அவைகளுக்குச் செலவிடப்பட்டுள்ள தொகைகளையும் ஒப்பிட்டால், இந்தியாவில் மிகக் குறைந்த அளவிலேயே மூலதன விகிதாச்சாரம் இருப்பது தெரியவரும். இந்தியாவில் அது ரூ 9,008; பிரிட்டனில் ரூ. 35,007; அமெரிக்காவில் ரூ. 1,45,575.

தெரிந்து கொள்ளுங்கள்!

1955 மார்ச் இறுதிக்கும்—இரண்டாவது திட்ட இறுதி வருடமான 1961 மார்ச் இறுதிக்குமிடையில் இந்திய இரயில்வேக்களில் அதிகப்படியாக 1,550 எஞ்சின்களும், 5,800 இரயில் பெட்டிகளும், 99 000 வாகன்களும் கையிருப்பிலிருக்குமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

இரயில்வே தொழில் பட்டறைகளை விஸ்தரிப்பதற்கும், புதிய பட்டறைகளை ஏற்படுத்துவதற்கும், இரயில்வே போர்டு ரூ. 46 கோடி திட்டம் வகுத்திருக்கிறது.

இலட்சிய எல்லையையும் தாண்டிவிடுமாம்!

புதுடில்லி, ஏப். 13—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் கால முடிவில் கிடைக்கக் கூடிய அதிகப்படியான வேலை வாய்ப்புகள் நகல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் 80 இலட்சம் எல்லையையும் தாண்டிவிடக் கூடும் என்று மத்திய கைத்தொழில்—வர்த்தக அமைச்சர் கருத்தறிவித்துள்ளாராம்.

பம்பாய்க்குப் பதிலாக பவநகர்

அகமதாபாத் ஆலை அரசர்கள் துறைமுகத்தை மாற்றுகின்றனர்!

அகமதாபாத் நகரில் உள்ள பல்வேறு நெசவு ஆலைகள், தங்களுக்குத் தேவையான இறக்குமதிகளை, இப்போது பம்பாய்த் துறைமுகத்திற்குப் பதிலாக பவநகர் துறைமுக வழியாகப் பெற கடந்த சில மாதங்களாக ஏற்பாடு செய்திருக்கின்றனராம்.

பம்பாய் வழியாக சாமான்களை இறக்குமதி செய்வதைவிட பவநகர் வழியாகச் செய்வது செலவுக் குறைவானது என்றும், அகமதாபாத்தில் உள்ள ஒருவர் வெளிநாட்டிலிருந்து பருத்தி இறக்குமதி செய்வதானல், பம்பாய்க்குப் பதிலாக பவநகர் துறைமுகத்தைப் பயன்படுத்தினல் கண்டி ஒன்றுக்கு ஒன்பது ரூபாய் மிச்சப்படுத்த முடியும் என்று கணக்கிடப்பட்டிருப்பதாயும் கூறப்படுகிறது.

தி. மு. கழக 2-வது மாநில மாநாடு: திருச்சியில் மே 17, 18, 19, 20 தேதிகளில்!

நாகர்கள் மன்னிப்புக் கோர வேண்டுமாம்

நாகமலைப் பகுதி, இந்தியாவின் பகுதி என ஒப்ப வேண்டுமாம்

மக்கள் சபையில் பண்டித பந்த் பேரம்

புதுடில்லி, ஏப். 13—

"எவரும் இந்தியாமீது யுத்தம் தொடுப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை; அப்படி துரதிருஷ்டவசமாக, ஏதேனும் நிகழுமானால், உள்நாட்டிலாகா தகுந்த நடவடிக்கை எடுக்கும்,"

என்று பண்டித பந்த் தெரிவித்திருக்கிறார்.

'எல்லையில் ஏதேனும் தொல்லைகள் நிகழுமானால், என்ன செய்வீர்கள்?' என்று கேட்கப்பட்ட போதுதான், அந்த மந்திரி, 'எவரும் இந்தியாமீது யுத்தம் தொடுப்பார்கள் என்று நான் நம்பவில்லை' என்று கூறினாராம்.

உள்நாட்டிலாகா மானியக் கோரிக்கைமீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கையில் பண்டித பந்த் மேலும் கூறியதாவது:—

நாகர்களுக்கு மன்னிப்பு வழங்க வேண்டும் என்று ஒரு உறுப்பினர் பேசினார்; ஆனால், நாகர்கள், தங்களது பலாத்காரச் செயல்களையும், வெறுப்பினையும் விட்டொழித்து இரக்கம் காட்டுமாறு மன்னிப்புக் கோருவார்களேயானால் இந்த யோசனைபற்றி பரிசீலிக்கலாம்.

"நம்மைப் பொறுத்தவரையில் நாம், நமது நாட்டில் மட்டுமின்றி, நம்மாலியன்ற அளவு உலகத்திலும் அமைதி நிலவப் பாடுபடுவோம். ஒவ்வொருவருடனும், குறிப்பாக, நமது அண்டை நாட்டார்களுடனும் நாம் நட்புறவே கொள்ள விரும்புகிறோம்.

"நாகமலை மாவட்டத்தின் இன்றைய நிலை மிகவும் வருந்தற்குரியதாகும். தொடர்ந்து அங்கே பலாத்காரச் செயல்கள் நடைபெற்ற வண்ணமுள்ளன. தீவிர நாகர் தலைவரான பிஜோவும், அவரது கும்பலுமே நடைபெறும் நிகழ்ச்சிகளுக்குப் பொறுப்பாளிகளாவர்.

"நாகர்கள் வாழும் இதர பகுதிகள், அரசியல் சட்டப்படி செயல்பட்டு முன்னேறி வருகின்றன நாகமலை முன்னேற்றமடைய முடியாதிருப்பதற்கு, பிஜோவின் செல்வாக்குத்தான் காரணம்.

"நாகமலை இந்தியாவின் ஒரு பகுதிதான் என்றும், தங்களுக்கும் இந்தியாவுக்கும் தொடர்பு உண்டு என்பதையும் பிஜோவும், அவரது கூட்டத்தாரும் உணர்வார்களேயானால் அந்தப் பிரதேசம் முன்னேற— அபிவிருத்தியடைய வழி ஏற்படும்.

படுகொலை போன்ற குற்றம் புரியபவர்கள் தண்டனை அனுபவித்தே தீரவேண்டும்; எனவே, பலாத்காரச் செயல்களைக் கைவிட்டு, நாகர் தீவிரவாதிகள் மன்னிப்புக் கோரவேண்டும்."

* * *

மக்கள் சபையில் மத்திய உள்நாட்டு அமைச்சர் பண்டித பந்த் கூறியுள்ள மற்றும் சில அம்சங்கள் இங்கு தரப்படுகிறது:—

துப்பாக்கிப் பிரயோகத்திற்குப் பதில் 'மாற்றுவழி' பற்றி ஆய்வு

'சிக்கலான நிலைமையில் போலீசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்வதற்குப் பதிலாக 'மாற்று வழி' ஏதாவது இருக்கிறதா என்பதை நான் ஆராய்ந்து கொண்டிருக்கிறேன்; கொள்கையளவில், துப்பாக்கிப் பிரயோகம் எனக்குப் பிடிக்கவில்லை; ஆனால், நூறு பேரைக் காப்பாற்றுவதற்காக ஒரு நபரைக் காயப்படுத்துவது நல்லதல்லவா என்பதையும் ஆலோசிக்க வேண்டும்." என்று, பந்த் குறிப்பிட்டுள்ளார்.

நெறி தவறிய மகளிருக்குப் புனர் வாழ்வளிக்க........!

சமுதாயத்தில் நெறி தவறிவிட்ட மகளிருக்குப் புனர் வாழ்வு அளிக்க பல விடுதிகளைத் துவங்க முடிவு செய்யப்பட்டிருக்கிறதாம். குற்றம் செய்த சிறுவர்களைச் சீர்திருத்தவும் இந்த விடுதிகள் பயன்படுமாம்.

ரூ. 90 கோடி பெறப்பட்டதாம்!

பிற்பட்ட வகுப்பினர் நலனுக்காக ரூ. 90 கோடி பெறப்பட்டதாம்; இதில், மாநில சர்க்கார்கள் ரூ. 58 கோடியும், மத்திய சர்க்கார் ரூ 32 கோடியும் அடுத்த ஐந்து ஆண்டில் செலவழிக்குமாம். இந்த வேலைகளுக்காகக் கடந்த ஐந்தாண்டில் மொத்தமாக ரூ 39 கோடி செலவழிக்கப்பட்டுள்ளது.

கழகத் தோழர்களுக்கு:

★

உறுப்பினராகச் சேர்ந்துள்ளவர்களுக்குரிய உரிமைச் சீட்டு, மே திங்கள் 1-வது வாரத்திலிருந்து அனுப்பி வைக்கப்படும்.

—தலைமை நிலையம்
தி. மு. கழகம்.

சீனப் பிரதமரின் சீரிய உதவி

புதுடில்லி, ஏப். 13—

'காஷ்மீர் இளவரசி' விமானத்தில் உயிர்நீத்த காப்டன், மற்ற சிப்பந்திகளின் குடும்பத்தினருக்கு உதவி செய்வதற்காக சீனப் பிரதமர் சூ—யென்—லாய், ரூ 82,000 வழங்கியுள்ளார்.

இந்தோ-சீன போர்நிறுத்த ஒப்பந்தம்

தென் வியட்நாம் சர்க்கார் இடக்கு!

ரஷ்யத் திட்டத்தை ஏற்பதற்கு பிரிட்டன் மறுப்பு

லண்டன், ஏப். 12—

1954-ம் ஆண்டு, ஜினீவா இந்தோ-சீன போர் நிறுத்த ஒப்பந்தத்தின் சில அம்சங்களை ஏற்க தென்வியட்நாம் சர்க்கார் மறுத்து வருவது குறித்து விவாதிக்க மீண்டும் 12 நாடுகள் மாநாட்டைக் கூட்டுவதற்கு ஒப்புமாறு, பிரிட்டனை ரஷ்யா கோரியது. ஆனால் இந்தத் திட்டத்தை, பிரிட்டன் ஏற்க மறுத்துவிட்டதாகத் தெரிய வருகிறது.

1954 ஒப்பந்தத்தை மேற்கொண்ட ஜினீவா மாநாட்டிற்கு ரஷ்யாவும்—பிரிட்டனும் கூட்டுத் தலைவர்களாக இருந்தது நினைவிருக்கலாம்.

பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா, ரஷ்யா, செஞ்சீனா, வட—தென்வியட்நாம், லாவோஸ், கம்போடியா ஆகிய ஒன்பது நாடுகளும் கூடி, இந்தோ—சீன போர் நிறுத்த ஒப்பந்தத்தை மேற்கொண்டன.

போர் நிறுத்த மேற்பார்வைக் குழுத் தலைவராக இந்தியாவும், உறுப்பினர்களாக போலந்து, கானடா நாடுகளும் நியமிக்கப்பட்டன.

இப்போது இந்த 12 நாடுகளும் கூடி, தென்வியட்நாம் நிலையை விவாதிக்க வேண்டுமென்ற ரஷ்யாவின் திட்டத்தை பிரிட்டன் ஏற்க மறுத்திருப்பதை அமெரிக்காவும் ஆதரித்திருக்கிறது.

*****-*******************************

மாநில மாநாடு

பிரதிநிதிகள் தேர்வு

மே 17, 18, 19, 20-ந் தேதிகளில் திருச்சியில் நடைபெறவிருக்கும் தி. மு. கழக 2-வது மாநில மாநாட்டிற்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பது குறித்துக் கீழ்க்கண்ட விளக்கம் தரப்படுகிறது:—

ஒவ்வொரு கிளைக் கழகங்களிலிருந்தும், செயலாளர், மற்றுமொரு உறுப்பினர் ஆக இருவர் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

மாவட்டக் குழுக்களைப் பொறுத்தவரையில், அதன் எல்லா உறுப்பினர்களுமே பிரதிநிதிகளாகக் கலந்துகொள்ளும் உரிமை பெற்றவர்களாவர்.

பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் வரவேற்புக்குழு உறுப்பினர்களாகவும், பிரதிநிதிகளாகவும் கலந்து கொள்ளும் உரிமை பெற்றுள்ளனர்.

எனவே, இவ்விளக்கத்திற்கேற்ப எல்லாக் கிளைகளும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து, அதன் விவரத்தையும், பிரதிநிதி ஒவ்வொருவருக்கும் ஐந்து ரூபாய் விதம் கட்டணமும் கிளைக் கழகச் செயலாளர் கையொப்பமுடன், ஏப்ரல் மாதம் இறுதிக்குள், 'தோழர் அம்பில் தர்மலிங்கம், வரவேற்புக் குழுத் தலைவர், தி. மு. க. மாநில மாநாடு, 9, கிலேதார் தெரு தெப்பக்குளம், திருச்சி' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

'அறிவகம்'
சென்னை-13
11—4—56

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

****

திருத்துறைப்பூண்டியில் பொதுச்செயலாளர்

பொதுக் கூட்டத்தில் இலட்சிய விளக்கம்

11-4-56 மாலை 6 மணியளவில், மஜீது மன்றச் சார்பில், திருத்துறைப்பூண்டி கடைத்தெரு முன்னியாற்றில் தோழர் டி. எஸ். கல்யாணசுந்தரம் தலைமையில் பொதுக் கூட்டம் சிறப்புற நடைபெற்றது நகர தி. மு. க. செயலாளர் தோழர் ஆர். தருமலிங்கம் சிறிது நேரம் பேசியபின், தோழர் ஜி. பராங்குசம் மாநில மாநாட்டின் சிறப்பைப்பற்றி விளக்கி விரிவுரையாற்றினார்.

இறுதியில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், திராவிட நாடு பிரியவேண்டிய அவசியத்தைக் குறித்தும், சர்வ கட்சிக் கூட்டணி பற்றி சென்னை அமைச்சர்கள் கூறிய குற்றச்சாட்டுக்குத் தகுந்த முறையில் பதிலளித்தும், மத்திய சர்க்கார் மாநில சர்க்காருக்கு இழைத்துவரும் அநீதிகளை விளக்கியும், தேவிகுளம்—பீர்மேடு தமிழகத்திற்கு சேர வேண்டிய காரணங்களை விவரித்தும், மற்றும் என். ஜி. ஓ.-க்கள், ஆரம்ப ஆசிரியர்களின் வாழ்க்கைத்தரம் உயர சர்க்கார் எடுத்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை விவரித்தும் சொற்பொழிவாற்றினார்.

பொதுச்செயலாளர் அவர்களுக்கு பல கிளைக் கழகங்கள் சார்பில் கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும், வாழ்த்துப் பத்திரங்களும் வாசித்து அளிக்கப்பட்டதுடன், மஜீது மன்ற சார்பில் 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2-ம், சேகல்—மடப்புரம் கிளைக் கழகச் சார்பில் மாநில மாநாடு நிதிக்காக ரூ. 5-ம் பொதுச்செயலாளரிடம் அளிக்கப்பட்டது.

ஆசிரியருக்குக் கடிதம்

ஜாதிவெறி ஒழிக!

ஐயா,

தூத்துக்குடி ஓச்சக்குடித் தெரு, 'சண்முக விலாஸ்' காம்பவுண்டில் 19—4—56 முதல் 23—4—56 வரை நடைபெறவிருக்கும் இராம நவமி உற்சவத்தையொட்டி இன்னிசைக் கச்சேரிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால், அத்தனையும் ஒரே சாதியினருடையது—அதாவது பிராமணர்களுடையது. மற்ற சாதியினருக்கு அவர்கள் நல்ல பாடக்கூடியவர்களாக இருந்தாலும் இடம் கிடையாதாம்.

பணம் பிரிப்பது எல்லோரிடமும்; ஆனால், சாதி துவேஷத்தினால் பிராமணரல்லாதார் கச்சேரியை அனுமதிக்க மறுக்கிறார்கள். ஆகவே, பொதுமக்கள், மற்றும் சங்கங்கள் இந்த சாதி துவேஷ நடவடிக்கையை கண்டிக்க வேண்டுகிறேன்.

ப. சந்தனராஜ்
தூத்துக்குடி.

★

இது நேர்மையா?

ஐயா,

கட்டிய கணவர்களாலும், உற்றார் உறவினர்களாலும், சமூகத்தாலும் கைவிடப்பட்டு, வாழ வசதியற்று, ஓரளவுக்கு சிரமமான எந்தப் பணியையும் செய்ய முடியாமல், வயது முதிர்ந்த கிழவிகளும், கைம்பெண்களும், அனாதைச் சிறுவர்களும், சைனா பஜார், பூக்கடை போன்ற சிறிது மக்கள் நடமாட்ட நெருக்கம் உள்ள பகுதிகளில் சிறிதளவு (ரூ. 5) கொள்முதலோடு பழம், சீப்பு போன்ற சிறு பொருள்களை நின்றுகொண்டே விற்று, வாழ்க்கையை நடைப்பிணமாக, நடைப் பாதையைக் கதியெனக் கொண்டு உயிர் வாழ்ந்து, இன்றோ நாளையோ உலக விடுதலை பெற்று விடலாம் என்ற நம்பிக்கையோடு உழன்றுகொண்டிருக்கும் அநாதைகளுக்கு — ஆதரவற்றவர்களுக்கு இந்தச் சர்க்கார் எவ்வித உதவியும் செய்ய முடியாவிட்டாலும், தங்களால் முடிந்தவரை உபத்திரவம் கொடுக்கத் துவங்கிவிட்டார்கள்.

'எங்களைக் கவனிப்போர் இந்த நாட்டில் யாருமே இல்லையா? நாங்களும் கள்ளத் தோணி ஏறத்தான் வேண்டுமா?' — என்று அந்த ஏழைகள் (கோழைகளல்ல) ஏங்குகிறார்கள். அவர்களை, நடைபாதைக்கு இடையூறு செய்வதாகக் குற்றம் சுமத்தி, வழக்குத் தொடுத்து போலீஸ் கோர்ட்டில் அவர்கள் விற்ற சரக்குகளைப் 'பறிமுதல்' செய்வதோடு, ரூ. 5, 10 என்று அபராதம் விதிக்கிறார்கள். இது நேர்மையா? இதுதான் ஏழைகளைக் காப்பாற்றும் ஜனநாயக சர்க்காரா? இவர்கள்தான் உத்தமர் காந்தி சொன்ன வழி நடப்பவர்களா? 'ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும்' என்பதை அறிவார்களா?

கா. மு. சக்கிரியா,
சென்னை-1.

சி. பி. சிற்றரசு

நிகழ்ச்சிகள்

12—4—56 மாலை 5 மணிக்கு மாயூரம் வட்டம் — மேக்கிரிமங்கலத்தில் மேற்படியூர் வைராண்மைக் கழகத்தினரால் தோழர் சி. பி. சிற்றரசு அவர்களுக்கு ஒரு வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்பட்டது.

வைராண்மைக் கழகத் தலைவர் தோழர் கோ. சி. மணி கூட்டத்திற்கு தலைமை வகித்து வரவேற்பிதழை வாசித்தளித்தார். தோழர் என். சிட்டப்பா, 'பஞ்சாயத்து சபைகளில் கட்சிகளின் ஆதிக்கம் தேவையில்லை' என்பதுபற்றிப் பேசினார்.

தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் தமக்களிக்கப்பட்ட வரவேற்புரைக்கு நன்றி தெரிவித்தும், வைராண்மைக் கழகம் மேற்கொள்ளவேண்டிய நற்பணிகள் பற்றியும் தெளிவுரையாற்றினார். வைராண்மைக் கழகச் சார்பில் தேநீர் விருந்தொன்றும் அளிக்கப்பட்டது.

இளங்கோ சொற்பயிற்சி மன்றம் துவக்கம்

அன்று மாலை 6 மணிக்கு வைராண்மைக் கழகக் கட்டிடத்தில் இளங்கோ சொற்பயிற்சி மன்றத்தைத் துவக்கிவைத்து, தோழர் சி. பி. சிற்றரசு பேசினார்.

பொதுக்கூட்டம்

அன்று மாலை 6-30 மணிக்கு மேக்கிரிமங்கலம் தி. மு. கழகச் சார்பில் தோழர் சாரங்கபாணி தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர்கள் இரா. இராசமாணிக்கம், கே. எஸ். சௌந்தரராசன், என். சிட்டப்பா ஆகியோர் பேசிய பிறகு, தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் தி. மு. கழகக் குறிக்கோள்கள் பற்றியும், சமுதாய சீர்திருத்தம் பற்றியும் விளக்கவுரையாற்றினார்.

சிறப்புச் சொற்பொழிவுகள்

13—4—56 மாலை 10 மணிக்கு, இராயபுரம்—பனைமரத் தொட்டி சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் மண்டபத்தில், மேற்படி மன்றச் சார்பில் புத்தாண்டு விழாவும், திருக்குறள் சிறப்பு சொற்பொழிவுகளும் திரு காரணதுரைக்கண்ணன் தலைமையில் நடைபெற்றது. 'அறத்துப்பால்' என்ற தலைப்பில், திரு. அ. ஞானசுந்தரம்; 'பொருட்பால்' என்ற தலைப்பில், அம்பை-இரா. சங்கரன்; 'இன்பத்துப்பால்' என்ற தலைப்பில், திரு. ம. இராசமாணிக்கம்; 'அறிவொளி' என்ற தலைப்பில் திரு. வே. கபிலன் பேசினர்.

விலங்கறுக்க - விடுதலை பெற வீரரே கூடுவீர்!
தாயகம் மீள - திராவிடம் காண தீரரே திரளுவீர்!

ராணி-கலைச்செழியன் திருமண விழா

அண்ணா தலைமையில் சிறப்புற நடைபெற்றது

திராவிட முன்னேற்றக் கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களது குமாரத்தி செல்வி ராணிக்கும்—திரு. ஞாயிறு-ராசா அவர்களின் குமாரர் செல்வன் கலைச்செழியனுக்கும், 15—4—56 காலை 9 மணியளவில், சென்னை—வண்ணையம்பதி தியாகராயர் கல்லூரி கலாமண்டபத்தில் அண்ணா அவர்கள் தலைமையில், திருமணம் சீரும் சிறப்புடனும் நடந்தேறியது.

அண்ணா அவர்கள் மணவிழாவுக்குத் தலைமை தாங்கி நடத்திக் கொடுக்கும்படி தோழர் என். வி நடராசன் அவர்கள் கேட்டுக் கொண்டார்; அதனை, சென்னை மாவட்ட தி. மு. கழக செயலாளர் இளம்பரிதி அவர்கள் வழிமொழிந்தார்.

அண்ணா அவர்கள் சீர்திருத்தத் திருமணங்குறித்து சிறிது நேரம் உரையாற்றிய பின்னர், மணமக்களாகிய ராணி—கலைச்செழியன் ஆகியோரிடம் உறுதி மொழிப் பத்திரத்தைக் கொடுத்து படிக்கச் செய்தார். பின்னர் நீண்டதோர் ஆரவாரத்திற்கிடையே மணமக்கள் மலர் மாலைகளை மாற்றிக்கொண்டனர்.

அடுத்து, தமிழகத்தின் பெரும் பண்பாளர் திரு. பி. டி. இராசன் எம்.எல்.ஏ. அவர்கள் மணமக்களை வாழ்த்திப் பேசினார்.

தொடர்ந்து தோழர்கள், சின்ன அண்ணாமலை, கவி-கா. மு ஷெரீப், ஜி. உமாபதி, பேராசிரியர் மயிலை-சிவமுத்து, பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார், டி. சண் எம்.எல்.ஏ., ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ., என். ஜீவரத்தினம், கே. கோவிந்தசாமி, காஞ்சி-கல்யாணசுந்தரம், முகவை-ஆர். எஸ் பாண்டியன், நடிப்பு-இசைப் புலவர் கே. ஆர். இராமசாமி, புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன், பேபி. கந்தசாமி எம்.பி. இலட்சிய நடிகர் எஸ் எஸ். இராசேந்திரன், தோழியர் சத்தியவாணி-முத்து, அருண்மொழி, இரெ. இளம்வழுதி, சி. பி சிற்றரசு, க. அன்பழகன், கே. ஏ. மதியழகன், ஈ. வெ. கி. சம்பத், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் மணமக்களை வாழ்த்திப் பேசினார்கள்.

வாழ்த்துரை வழங்கும் நிகழ்ச்சிக்கு இடைஇடையே இசைச் செல்வி கஸ்தூரி அவர்களின் இசை விருந்தும், இசை முரசு நாகூர் அனீபா அவர்களது இன்னிசையும், நாட்டிய ஆசிரியர் ராகவய்யா (பிள்ளை) அவர்களின் மாணவிகளான ராணி—ரமணி சகோதரிகளின் நாட்டியமும் நடைபெற்றன.

இறுதியாக அறிஞர் அண்ணா அவர்கள் தனது முடிவுரையில் மணமக்களை வாழ்த்தியும், பாராட்டியும் பேசினார்.

மணமக்களுக்கு ஏராளமான வாழ்த்துப் பத்திரங்களும், பாராட்டிதழ்களும், மலர் மாலைகளும், அன்பளிப்புகளும், கழகத் தோழர்களாலும், உறவினர்களாலும், அளிக்கப்பட்டன.

என். வி. நடராசன் அவர்கள் நன்றி கூறலுடன் மணவிழா இனிது முடிவுற்றது.

மணவிழாவிற்கு, மாநிலத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த கழகத் தோழர்களும், நிர்வாகிகளும், மற்றும் நகரில் உள்ள நண்பர்களும் வந்திருந்து சிறப்பித்தனர்.

திருமண விழாவிற்கு வரமுடியாமைக்கு அறிவித்தும், மணமக்களை வாழ்த்தியும் செய்தி அனுப்பியிருந்தோர் :—

பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள், கோவை ஜி. டி. நாயுடு, தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம், பிரஜா சோஷலிஸ்டு கட்சித் தலைவர் ஏ. சுப்பிரமணியம், சென்னை கல்வித்தறைத் தலைவர் என். டி. சுந்தரவடிவேலு, கோவை சி. எஸ் இரத்தினசபாபதி (முதலியார்), முன்னாள் அமைச்சர் எஸ். ராமநாதன், வி. வி. இராமசாமி எம். எல். சி., கண்ணூர் கே ஏ. முருகேசன்; ஈரோடு எஸ். ஆர் சந்தானம்; சேலம் சித்தையன், நாராயணசாமி, கொண்டய்யா, கே. ஏ. பி. விசுவநாதம் டி. கே. எஸ். சகோதரர்கள், திருச்சி மாவட்ட தி. மு கழகச் செயலாளர், அம்பில் தர்மலிங்கம், தெ. ஆ. மாவட்ட தி. மு கழகச் செயலாளர் இரா. சாம்பசிவம், தஞ்சை மாவட்ட தி. மு. க. செயலாளர் இளங்கோ, வடஆற்காடு மாவட்ட தி. மு. க. செயலாளர் முல்லை-சத்தி, விருதுநகர் உத்தண்டன்; ஈரோடு எஸ். அப்பாவு, ஆவுடையப்பன், எஸ். ஆர். யூ தலைவர் சி. இராகவானந்தம், எஸ் எஸ் தென்னரசு, சலகண்டபுரம் ப. கண்ணன், திருச்சி டி. எம். முத்து, பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, தூத்துக்குடி எம். எஸ். சிவசாமி, அருப்புக்கோட்டை சிவசண்முகசுந்தரம், ப. உ. சண்முகம், கே. விநாயகம் எம். எல். ஏ., கன்னிவாடி ஊராண்மைக் கழகத் தலைவர் சீரங்கராயர், குறிஞ்சிப்பாடி ஊராண்மைக் கழகத் தலைவர் எஸ். கே. சம்பந்தம், புலவர் க. திருமாறன் பத்மா, ஈரோடு சண்முகவேலாயுதம், பட்டுக்கோட்டை இரா. சவுரிராசன், ஆர். டி. முத்து ஈரோடு, காரைக்குடி வாரச் செய்தி ஆசிரியர், ஆனைமலை வேணு, வாணியம்பாடி விசுவநாதம், கோவை டி. ஏ. சந்தானம், தர்மபுரி பி. அப்பாவு பிள்ளை, சென்னை நகரசபை உறுப்பினர் கே. ஆறுமுகம், டிரக்அவுஸ் ஜெகன்னாதன் திருச்சூர், தங்கவயல் சின்னதுரை, சண்முகம் குலசேகரன் குலசேகரப்பட்டிணம், திருமதி தி. விமலகுமாரி, சென்னை பி. சீனுவாசன், காஞ்சீபுரம் சுப்பிரமணியம் பிள்ளை, பண்ணுருட்டி இரா. பரமசிவம், காரமடைதுரை முருகேசன், கருப்பண்ணன்—வீரம்மாள், திராவிட கழகம் நாமக்கல், எஸ். கே. உசேன் பெங்களூர், கோபி ராசு, காஞ்சி மதிவாணன், பொன்மலை ஜி. பராங்குசம், பம்பாய் தியாகராசன், பம்பாய் பொற்கோ, மாயூரம் சண்முகம், மீனாட்சிசுந்தரம், பம்பாய் ரத்தினசாமி, கவிஞர் வாணிதாசன், வெண்சங்கு பெத்தண்ணன், திருவண்ணாமலை கிருஷ்ணராஜ், என். ஏ. ரஷீத், சென்னை த கோ. துரைராஜ், இலங்கைத் தோழர்கள் கே. பி. நீலமேகம், எ. பி. சுப்ரமண்யம், என். முத்துசாமி, வி. கே. பி. கதிர்வேலு, பி. வீரமலை, எம். ஆர். கோவிந்தசாமி, எ. நெடுமாறன், திருப்பூர் என். டி. இராமசாமி, வாணியம்பாடி தத்தப்பன், மாயூரம் சி. காந்தி, மாயவரம் கிட்டப்பா, செங்குட்டுவன், சங்கையன், எஸ். கருணாநந்தம், ஆண்டர்சன்பெட் எஸ். பெ. கங்காதரன், சென்னை ஒரிஜினல் வேல் சி. பாலசுப்ரமண்யம், புத்தனேரி வெங்கடாசலம், ஆர். வெங்கடராஜுலு, மேட்டூர் வெங்கடாசலம், பட்டுக்கோட்டை இராமாமிர்தம், தூத்துக்குடி நடராசன், ராயப்பன், முத்துப்பேட்டை ந. தருமலிங்கம், கடலூர் செல்வராசன், திருவனந்தபுரம் சுப்பராயலு, பூவை ராமசாமி, குணியமுத்தூர் தங்கமாணிக்கம், பம்பாய் கொலாபா சகன்னாதன் ஆகியோரும், மலேயா கம்பார் ஔவை படிப்பகம், பம்பாய் திருமகன் கம்பெனி, திருச்சி திராவிடப் பண்ணை, குடியேற்றம் இராசன் பண்ணை, சென்னை அமைந்தகரை அறிவியக்க மன்றம், குடியேற்றம் பகுத்தறிவு இளைஞர் மன்றம், திருநெல்வேலி ஆதித்திராவிட மகாசன சங்கம்—பம்பாய், திருவள்ளுவர் கலா மன்றம்-பம்பாய், பம்பாய் தாராவி தி. மு கழகம், ஆமதாபாத் தி. மு. கழகம், கும்பகோணம் தி. மு. கழகம், முத்துப்பேட்டை தி மு. கழகம் ஆகியவைகளும்

தோழர்கள் கே. எம். கண்ணபிரான், இளம்பரிதி, செங்குட்டுவன், சேதுராசன், சி. ஆர். பாலசுந்தரம், எ. கண்ணப்பன், வி. ராமசாமி, பன்மொழியன், ஆர். டி. அரசு ஆகியோரும், மற்ற சென்னைத் தோழர்களும் தோழியர்கள் அலமேலு-அப்பாதுரை அம்மையார், கமலா-பாலசுந்தரம் ஆகியோரும் உடனிருந்து திருமண விழாவிற்கான ஏற்பாடுகளைச் செய்து சிறப்பித்தனர்.

திருமண விழாவின் நினைவாக 'நம்நாடு' வளர்ச்சிக்காக ரூ. 10 அன்பளிப்பாகத் தரப்பட்டது—வரப்பெற்றோம். நன்றி—பொறுப்பாளர்.

புயல் நிவாரண நிதி

திருவண்ணாமலை தி. மு. கழக மாணவர் கிளையின் சார்பில், புயல் நிவாரண நிதிக்காக ரூ. 50 தோழர் ப. உ. சண்முகம் மூலம், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களிடம் கொடுக்கப்பட்டது — வரப்பெற்றோம்.

—தி.மு.க. தலைமை நிலையம்

இது உண்மையா?

நாகர்கோவில், ஏப். 14—

சென்னை மாநிலத்தில் இணைக்கப்பட இருக்கும் தோவாளை, அகத்தீசுவரம், கல்குளம், விளவன்கோடு வட்டங்கள் நிர்வாக வசதியை யொட்டி, ஒரு தனி மாவட்டமாக ஒன்றாக இணைக்கப்படும் எனத் தெரியவருகிறது. இப்புதிய மாவட்டத்திற்கு 'கன்னியாகுமரி' எனப் பெயரிடப்படுமெனத் தெரிவதாக செய்தி ஒன்று கூறுகிறது.

படத் தணிக்கை முறையில் புதிய நடவடிக்கை

புதுடில்லி, ஏப். 15—

இந்திய, வெளிநாட்டுப் படங்களைக் கட்டாயமாக தணிக்கை செய்ய இந்தியப் பேரரசின் செய்தி ஒலிபரப்பு அமைச்சர், புதிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முனையக்கூடுமாம்!

இந்தியப் பேசும் படங்களை திரைக்கதை, வசன கட்டத்திலேயே தணிக்கை செய்ய ஆவன செய்யவேண்டும் என்று காங்கிரஸ் செயற் குழுக் கூட்டமொன்றில் கருத்தறிவிக்கப்பட்டுள்ளதாம்

6,000 அடி உயரத்தில்!

ஷில்லாங்கிலிருந்து சுமார் 15 மைல் தூரத்தில் கடல் மட்டத்திலிருந்து சுமார் 6,000 அடி உயரம் கொண்ட காசி மலையில், லயிட்லிங்காட் என்ற பிரதேசம், அசாம் தலைநகர விமானத் தளத்திற்கான இடமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறதாம்.

கழகக் கூட்டம்

★

ஆனகாபுத்தூர் :

17—4—56 மாலை 6 மணிக்கு

தலைவர் :

எம். கல்யாணசுந்தரம்

பேசுவோர்:

இரா. நெடுஞ்செழியன்
என். வி. நடராசன்
சி. இராமலிங்கம்
ஆர். புரட்சிமணி

A. மேட்டூர் :

(திருச்சி மாவட்டம்)

குரோமி பூங்கா மைதானத்தில்
தி. மு. கழகத் துவக்க விழா
18—4—56 மாலை 5 மணிக்கு

தலைவர் :

எம். எஸ். மணி

பேசுபவர் :

அ. டோன்னம்பலனார்

★

சென்னை— இராயப்பேட்டை

(சீனிவாசபுரம் 2-வது தெருவில்)
37-வது வட்ட தி. மு. கழக
5-ம் ஆண்டு விழா
18—4—56 மாலை 6 மணிக்கு

தலைவர் :

பொ. ஏழுமலை

பேசுவோர்:

இரா. நெடுஞ்செழியன்
என். வி. நடராசன்

சென்னை 37-வது வட்ட செயற்குழு உறுப்பினர்கட்கு:

18—4—56 புதன் கிழமை இரவு 8 மணியளவில், மேற்படி கழக செயற் குழுக் கூட்டம், எண் 5, வெள்ளாளத் தெரு, புலியூர், கோடம்பாக்கத்தில் நடைபெறும். அதுபோது, சென்ற ஆறுமாத வரவு-செலவுக் கணக்கு சரிபார்த்தல், கொட்டகை நிர்மாணித்தல், மாநாடு பிரதிநிதி தேர்ந்தெடுத்தல் ஆகியவைகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

செங்கற்பட்டு மாவட்ட

தி. மு. கழக உறுப்பினர் கூட்டம்

"22-4-56 காலை 10 மணிக்கு, குன்றத்தூர் டி. என். சம்பந்தம் இல்லத்தில், செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழக உறுப்பினர் கூட்டம் நடைபெறும். அதுபோது, மாநில மாநாட்டு நிதி; முன்னாள் செயலாளர் வரவு-செலவு; செயலாளர் இராஜினாமாவும், புதுச் செயலாளர் தேர்தலும் ஆய்வுக்கு வரும்,"

என்று, மாவட்டச் செயலாளர் கே. டி எஸ். மணி அறிவிக்கிறார்

ஏஜெண்டுகள் தேவை

கீழ்க்கண்ட இடங்களில் 'நம் நாடு' இதழ்களை விற்பனை செய்ய முன்பணம் கட்டக்கூடிய பொறுப்புமிக்க ஏஜெண்டுகள் தேவை :—

திருச்சி
திருநெல்வேலி
காஞ்சீபுரம்
யாழ்ப்பாணம்
இராசபாளையம்
திசையன்விளை

பம்பாய் சம்பவங்கள்......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வசதி, கடன் வசதி முதலியன தருவதென்று, பம்பாய் சர்க்கார் முடிவு செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

கிளர்ச்சிக்காரர்களின் தாக்குதலுக்கு ஆளாகி நஷ்டமடைந்த குடும்பங்களுக்கு 2500 ரூபாய் நஷ்டஈடும், ரூ. 25,000 கடன் உதவியும் தரப்படும் என்றும், மாவட்ட நிர்வாக அதிகாரிகள் இந்த நிவாரண உதவிக்குப் பொறுப்பானவர்களாயிருப்பர் என்றும் தெரியவருகிறது.

உணவுப் பொருள்மீது விற்பனை வரி விதிப்பு

உ. பி. சர்க்கார் திட்டத்திற்குக் குடியரசுத் தலைவர் அங்கீகாரம்

புதுடில்லி, ஏப். 12—

உணவுப் பொருள், உப்பு, மற்றும் இதர அத்தியாவசியப் பொருள்கள்மீது விற்பனை வரி விதிப்பதற்கான உத்திர பிரதேச மாநில சர்க்காரின் திட்டத்திற்குக் குடியரசுத் தலைவர் தனது அனுமதியை வழங்கிவிட்டதாகவும், ஆனால் இந்த வரி விதிப்பு ரூபாய்க்குக் காலணாவிற்கு மேல் செல்லக்கூடாது என்ற வரி விதிப்பு விசாரணைக் கமிஷன் சிபாரிசுக்கு ஒப்ப இருக்கவேண்டுமென நிபந்தனை விதித்திருப்பதாயும் நிதி மந்திரி தேஷ்முக், மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

மேலும் இந்த வரிவிதிப்பு, ஏதேனும் ஒரு முனையிலேயே இருக்கவேண்டுமென்றும் உ. பி. சர்க்காருக்குத் தெரிவிக்கப்பட்டிருப்பதாயும் தேஷ்முக் கூறுகிறார்.

குழந்தைகளைத் தூக்கிச் செல்லும் ஓநாய்கள்!

அலகாபாத், ஏப். 15—

சென்ற திங்களில், அலகாபாத் அருகே 20 குழந்தைகளை ஓநாய்கள் தூக்கிச் சென்றுவிட்டதாக தகவல் கிடைத்துள்ளது. இரவில் திறந்த வெளியில் படுத்துறங்கும்போது ஓநாய்கள் குழந்தைகளை தூக்கிச் சென்றுவிடுவதாகக் கூறப்படுகிறது.

பம்பாய் மந்திரிக்கு பலத்த மரியாதை!

கருப்புக் கொடிகளுடன் மராட்டியர் ஆர்ப்பாட்டம்

மராட்டியருக்கு பம்பாய் இல்லை என்று பேசிய மந்திரி ஒருவருக்கு, மரியாதை பலமாகத் தரப்பட்டிருக்கிறது.

ஒய் பி. சாவன் என்ற பம்பாய் மாநில தல தாபன மந்திரி, இங்குள்ள திறந்த வெளி அரங்கு ஒன்றைத் திறந்துவைக்க வந்தார். அப்போது, ஏராளமான ஆர்ப்பாட்டக்காரர்கள் அரங்கிற்கு வெளியே கூடியிருந்தனர்.

மந்திரி அரங்கைத் திறந்து வைத்து பேச எழுந்ததும், உள்ளும் புகுந்திருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள், கருப்புக் கொடிகளைக் காட்டி, மராட்டிய மண்டலக் கோரிக்கைக்கான ஒலி முழக்கங்களை எழுப்பியிருக்கின்றனர் அவர்களில் சிலர் பெண்களும் இருந்தனர்.

அவர்களை, நகரசபை அதிகாரிகளும், காங்கிரஸ் தொண்டர்களும் அரங்கிற்கு வெளியே இழுத்துச் சென்று விட்டனராம்.

பின்னர் பேசி முடித்துவிட்டு அந்த மந்திரி, வெளியேவந்தபோது, அங்கே கூடியிருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள், சம்யுக்த மராட்டிய கோஷங்களை எழுப்பி, கருப்புக் கொடிகளைக்காட்டி, ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர்.

அந்த மந்திரிமீது ஆத்திரங்கொண்ட சிலர், செருப்புகளைக் கூட அவர் மீது வீசி எறிந்ததாகக் கூறப்படுகிறது.

இந்த ஆர்ப்பாட்டங்களை ஒட்டி மூன்று பெண்கள் உட்பட எழுபேர்களை போலீசார் கைது செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

இரண்டாம் திட்டத்தின்கீழ், அமையும் சிறு தொழில்களுக்குத் தேவையானதொழிலாளர்களுக்கு; தொழில் நுணுக்கப் பயிற்சி அளிப்பதற்காக 20 பயிற்சிப் பள்ளிகள் அமையும் என்று தெரியவருகிறது.

கழகத்தின் கல்வி........

(முதல் பக்கத் தொடர்ச்சி)

இறுதியாக அண்ணா அவர்கள் நீண்ட நேரம் கல்வித்துறை பற்றியும், அதன் வளர்ச்சி குறித்தும், அந்த வளர்ச்சியில் கழகத்தின் பங்கு குறித்தும், கல்வி விஷயத்தில் சர்க்காரின் நிலை தடுமாறும் போக்கு குறித்தும், அரசியல் நிலைகள் குறித்தும், விரிவான அரியதோர் கருத்துரை வழங்கினார்.

தலைவர் முடிவுரைக்குப் பின், நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.